தினக்குரல்

# 2026 நிதியாண்டில் ₹1,606 கோடிக்கும் அதிமான மதிப்புள்ள 2.5 லட்சத்திற்கும் மேற்பட்ட கிளைம்களை தமிழ்நாட்டில் தீர்த்து வைத்துள்ளது ஸ்டார் ஹெல்த்




சென்னை, ஜுன், 26: இந்தியாவின் முன்னணி காப்பீட்டு நிறுவனமான ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (NSE: STAR-HEALTH, BSE: 543412), தமிழ்நாடு முழுவதும் ஹெல்த் இன்சூரன்ஸ் தேவையை மேம்படுத்துவதற்கும், விரைவான, வெளிப்படையான மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட கிளைம் ஆதரவை வழங்குவதற்கும் தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

அதன்படி, நிதியாண்டு 26-ல், இந்நிறுவனம் மாநிலத்தில் ₹1,606 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள 2.5 லட்சத்திற்கும் மேற்பட்ட கிளைம்களைத் தீர்த்து வைத்துள்ளது. நிதியாண்டு 26-ல், இந்நிறுவனம் தமிழ்நாட்டில் ₹2,951 கோடி மொத்த எழுதப்பட்ட பிரீமியத்தைப் (GWP) பதிவு செய்துள்ளதுடன், 3.8 மில்லியனுக்கும் அதிகமான மக்களின் வாழ்வாதாரத்திற்குப் பாதுகாப்பு அளித்துள்ளது. மேலும், அதன் போர்ட்ஃபோலியோவில் 94%-க்கும் அதிகமானவை ரீடெய்ல் ஹெல்த் பிரிவைச் சேர்ந்தவையாகும். மாநிலத்தில் இந்நிறுவனத்தின் இருப்பு 119 கிளைகள், 1.28 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆலோசகர்கள் மற்றும் 1,900-க்கும் மேற்பட்ட நெட்வொர்க் மருத்துவமனைகளால் ஆதரிக்கப்படுகிறது.

ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் எம்டி மற்றும் சிஇஒ-வான ஆனந்த் ராய் கூறுகையில், "தமிழ்நாட்டில்தான் ஸ்டார் ஹெல்த் நிறுவனத்தின் பயணம் தொடங்கியது. மேலும், நிதியாண்டு 25-ல் இம்மாநிலத்தில் நாங்கள் பெற்றுள்ள 62% ரீடெய்ல் ஹெல்த் சந்தைப் பங்கு, பல ஆண்டுகளாக வாடிக்கையாளர்கள் எங்கள் மீது வைத்துள்ள ஆழமான நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. தேசிய அளவில், நிதியாண்டு 26-ல் எங்களின் 31.3% ரீடெய்ல் ஹெல்த் சந்தைப் பங்கு எங்களுக்கு ஒரு பெரிய அளவிலான வளர்ச்சியையும், அதே நேரத்தில் கூடுதல் பொறுப்பையும் வழங்குகிறது. எங்களின் அடுத்த கட்டப் பயணம் என்பது, உள்ளூர் அளவிலான ஆலோசனை மற்றும் மருத்துவமனை அணுகல் முதல் விரைவான கிளைம் தீர்வு, வருமுன் காக்கும் நல்வாழ்வு (preventive wellness) மற்றும் வீட்டிலிருந்தே பெறும் பராமரிப்பு வரை வாடிக்கையாளர்களின் ஒட்டுமொத்த அனுபவத்தை எளிதாக்குவதற்கு இந்த வளர்ச்சியைப் பயன்படுத்துவதாகும். தினசரி 8,300-க்கும் மேற்பட்ட கிளைம்கள் பரிசீலிக்கப்பட்டு வரும் சூழலிலும், தற்போது 20% வழக்கமான கேஷ்லெஸ் கிளைம்களுக்கு ஏஐ (AI) தொழில்நுட்பம் ஆதரவளித்து வரும் நிலையிலும், குடும்பங்களுக்கு மிகவும் தேவைப்படும் நேரத்தில் மருத்துவக் காப்பீட்டுச் சேவையை மேலும் துரிதமாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுவதே எங்களின் முக்கிய நோக்கமாகும்."